එච්. එම්. විජිත හේරත්, පා. ම.
எச். எம். விஜித ஹேரத், பா. உ.
**H. M. Vijitha Herath, M. P.**

විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍ය
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்
**Minister of Foreign Affairs, Foreign Employment and Tourism**

---

## வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரின் வெசாக் தின செய்தி

இப்புனித தினத்தில், அனைத்து இலங்கையர்களுக்கும், உலகளாவிய பௌத்த சமூகத்திற்கும் எனது அன்பான வெசாக் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். புத்தரின் பிறப்பு, ஞானம் மற்றும் பரிநிர்வாணத்தை நினைவுகூரும் இப்புனித நாள், உலகம் முழுவதும் உள்ள பல மில்லியன் மக்களுக்கு ஆழ்ந்த சிந்தனை மற்றும் புதுப்பித்தலுக்கான தருணமாகும்.

மோதல்கள் மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வு முதல் சுற்றுச்சூழல் நெருக்கடி வரை சிக்கலான சவால்களை உலகம் எதிர்கொள்ளும் நேரத்தில், புத்தரின் காலத்தால் அழியாத போதனைகள் தொடர்ந்து ஞானத்தையும் வழிகாட்டுதலையும் எமக்களிக்கின்றன. எம்முள் இருக்கும் பேராசை, வெறுப்பு மற்றும் மாயையை வெல்ல வேண்டும் என்ற பகவான் புத்தரின் போதனை, நீடித்த அமைதியுடனான மன மாற்றத்துடன் தொடங்குகிறது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. தர்மத்தால் வடிவமைக்கப்பட்ட தேசமொன்றாக, நீதி மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பின் அனைத்துத் துறைகளிலும் இரக்கம், மன ஒருமைப்பாடு மற்றும் நீதியை மேம்படுத்துவதில் இலங்கை உறுதியாக உள்ளது.

வளம் நிறைந்த பௌத்த பாரம்பரியத்தைக் கொண்ட தேசமொன்றாக, இலங்கை தனது தேசிய பயணத்தில் தர்மத்தை வழிகாட்டும் சக்தியொன்றாக தொடர்ந்தும் தம்மை நிலைநிறுத்தி வருகிறது. நாம், "தூய்மையான இலங்கை" கொள்கை போன்ற முயற்சிகள் மூலம், பொருளாதார முன்னேற்றத்தை, சுற்றுச்சூழல் சார்ந்த பொறுப்பு மற்றும் சமூக சமத்துவத்துடன் இணைக்க முயல்வதுடன், நிலைபேறானதும், கருணையுடன் கூடியதுமான அபிவிருத்திக்கான நமது உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறோம்.

வெசாக் திருநாளானது, ஒற்றுமை மற்றும் தார்மீக மனத்திடத்திற்கானதொரு நினைவூட்டலாக அமைவதாகுக. நாம் இவ்வுன்னத பாதையில் பயணிக்கும்போது, மெத்தா (அன்பு-கருணை), கருணா (இரக்கம்), முதித்தா (தன்னலமற்ற மகிழ்ச்சி) மற்றும் உபேக்கா (சமநிலை) ஆகியவற்றின் அடித்தளமாக இருக்கும் உலகொன்றை உருவாக்க முயல்வோமாக. அனைவருக்கும் அமைதியானதும், ஆன்மீக ரீதியிலானதுமான நாளாக வெசாக் புனித நந்நாள் அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விஜித ஹேரத்
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்
2025 மே மாதம் 12

---

කාර්යාලය/அலுவலகம்/Office: +94-11-2430221, +94-11-2445498 ෆැක්ස්/பெக்ஸ்/Fax No. : +94-11-2430222
වෙබ් අඩවිය/வலைத்தளம்/Website: www.mfa.gov.lk - ඊමේල්/மின்னஞ்சல்/Email: fmo@mfa.gov.lk
විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය, ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, குடியரசுக் கட்டிடம், கொழும்பு 01, இலங்கை.
Ministry of Foreign Affairs, Foreign Employment and Tourism, Republic Building, Colombo 01, Sri Lanka.